RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s225

OPEN ACCESS

# தமிழர் இறைநெறியும் முன்னோர் வழிபாடும்

**வை. இராமராஜபாண்டியன் [அ, *]**

[அ] தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

# Tamil Theology and Ancestor Worship

**V. Ramarajapandian [a, *]**

[a] School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai- 625021, Tamil Nadu, India.

* Corresponding Author: drramarajapandian@gmail.com

Received: 04-01-2021
Revised: 14-04-2021
Accepted: 21-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

In ancient times, the loved ones had the tradition of worshipping their virtues after their demise. The practice of growing more and more family was practiced when those who worked for their family to progress were worshipped after their deaths. One of the rituals is to make the dead sieve. The ancestral worship is to pay tribute to the experiences of the ancestors who have been with us in the relationship and blood of the tribes. This cult was associated with the middle stone worship of the people of this group over time. These are the foundations of the study of the ancient cult sculptors and theories of the present day.

**Keywords:** Worship, Ancestral worship, Stone worship, Tamil Family

## முன்னுரை

முன்னோர் வழிபாடு பன்னெடுங்காலமாக கடைபிடிக்கப்பட்டு வரும் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும். நாம் வணங்கி வழிபடும் இறைவனைக் காண இயலாது. ஆனால் நம் முன்னோர்களைப் பார்த்திருப்போம். உறவாலும் உதிரத்தாலும் நம்மோடு இனங்கலந்த முன்னோர்களின் அனுபவங்களை ஆதாரமாகக்கொண்டு, வாழ்ந்த வாழ்க்கைக்கு நன்றி கூறுவதே முன்னோர் வழிபாடாகும். இனக்குழு மக்கள் ஒன்றுடன் ஒன்று வாழ்ந்து வந்த காரணத்தினால், தன்னுடன் வாழ்ந்த முன்னோர்களுக்குக் கோயில் எழுப்பி வழிபாடு செய்யும் வழக்கத்தைக் கையாண்டனர். அவர்கள் நினைவாக அவர்களுக்கு மிகவும் பிடித்த பொருள்கள், உணவு வகைகள் வைத்து வழிபட்டனர். இவ்வாறான முறை நாட்டுப்புற மக்களிடம் முன்னோர் வழிபாடாக நாளடைவில் உருவானதை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## முன்னோர் வழிபாட்டின் தோற்றம்

“இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் உருவானதே முன்னோர் வழிபாடு. இதில் எண்ணற்ற நம்பிக்கைகள் அடங்கியுள்ளன. இறப்பிற்குப் பிறகு இந்த உடலைவிட்டு உயிர் பிரிந்து செல்கின்றது என்ற நம்பிக்கை தோன்றிய போது முன்னோர் வழிபாட்டுச் சடங்கு தோற்றம் பெற்றது. இவ்வுலக வாழ்வு இம்மை, மறுமை கொண்டது. பல பிறப்புகளைக் கொண்டது. ஒரு பிறவியில் ஒருவர் பெறும் ஆற்றல் அவர் இறந்த பின்பும்

அவருடைய இனத்தவருடன் தொடர்பு பெறுகின்றது போன்றே நம்பிக்கைகள் முன்னோர் வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன".

இனக்குழுச் சமூகத்தில் வாழ்ந்த மக்கள், தம்முடைய முன்னோர்கள் இறந்தபின்பு, அவர்களுடைய ஆவி தங்களைக் காப்பாற்றும் என்று எண்ணிக்கொண்டு வழிபட்டனர். இதனை பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மானிடவியல் அறிஞர் டைலர், சமுதாயவியல் அறிஞர் ஹெர்பர்ட் ஸ்பென்சர் போன்றோர் முதிர்ச்சியடையாத மனப்பக்குவம் உடையோரின் சமய நம்பிக்கை என மதிப்பிட்டனர். "தொன்மைக் குடியின் இறப்பையும் இறப்புக்குப் பின்னர் நிகழும் செயலையும் புரிந்து கொள்ளவியலா நிலையில் ஏற்பட்ட மருட்சியில் இறந்தோரின் ஆவிகளை வழிபடத் தொடங்கினர் என்கின்றனர்.

முன்னோர் வழிபாடானது இறந்தவர்களின் வலிமை மிகுந்த சக்தியானது வாழ்வோரின் வாழ்க்கையில் முக்கிய இடம் பெறுகிறது என்ற கருத்தாக்கத்தால் உண்டானது. இவ்வுலக வாழ்க்கையானது நன்மை - தீமை, இம்மை - மறுமை கொண்டு பல பிறப்புகளைக் கொண்டதாகும். இப்பிறவியில் செய்கின்ற நன்மையானது மறுபிறவியிலும் அமையும். முன்னோர்களிடம் இருந்த ஆற்றலானது அவர்கள் இறந்த பின்னும், அவர்களுடைய வம்சாவழியினருக்குத் தொடர்ந்து ஆற்றல் கிடைக்கிறது. இதன் அடிப்படையில் தான் முன்னோர்களின் வழிபாடானது ஆரம்பமாகிறது.

"இறந்த முன்னோர்களின் ஆற்றலும் அனுபவமும் வாழ்வோரைச் செழுமைப்படுத்தும் என்றும், இறந்த உறவினரின் ஆசி என்றென்றும் வாழ்வோருக்கு கிடைக்க வேண்டும் என்று முன்னோர்களின் வழிபாடுகளை இன்றளவும் தமிழர்கள் கடைபிடித்து வருகின்றனர் என்று பக்தவத்சல பாரதி கூறுகின்றார். பழங்குடியினர் சமுதாயத்தில் குலத்தின் மூதாதையர் அக்குலத்தவர் அல்லது கால்வழியினர் அனைவராலும் வணங்கப்படுகிறார். இவை தொன்மை மூதாதையர் வழிபாடு, உண்மை வழிபாடு என்று அழைக்கப்படுகிறது.

## முன்னோர் வழிபாட்டின் வகைகள்

1. வீர வழிபாடு
2. வடக்கிருந்தோர் வழிபாடு
3. பள்ளிப்படைகள்
4. பொதுத் தெய்வ வழிபாடு

## வீர வழிபாடு

பண்டையக் காலத்தில் போரின் போது வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு கல்நட்டு வழிபடுவது மரபாக இருந்தது. அவ்வீரக்கல்லில் வீரருடைய பெயர், சிறப்புகள் பொறிக்கும் வழக்கம் இருந்துள்ளது. வீரனொருவன் போரில் வீரப்புண்பட்டு இறந்தான். அவ்வீரனுக்கு முல்லை நிலத்தலைவன் வேங்கை மலர் சூட்டித் தொழுதுள்ளான். இதனை,

"ஓங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீப்

போந்தையந் தோட்டில் புனைந்தனர் தொடுத்துப்

பல்லான் கோவலர் படலை சூட்டக்

கல்லா யினையே கடுமான் தோன்றல்" (புறம், பா.265: 2-5)

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது. "நடுகல் வழிபாடானது பண்டைத் தமிழர்களின் வீரசெயலோடு தொடர்புடையச் சடங்காகும்"

## வீர வழிபாட்டுச் சடங்கு

வீரன் ஒருவன் போரில் வீரப்புண்பட்டு இறந்துவிட்டால் அவனுக்குச் செய்யும் சடங்காக,

“காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று

இருமூன்று வகையில் கல்லொடு புணரச்

சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே” (தொல்.பொருள்.நூ.1006,19-22)

என்னும் நூற்பா மூலம் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

## வடக்கிருந்தோர் வழிபாடு

வடக்குத் திசையை நோக்கி தான் சாகும்வரை உணவு உண்ணாமல் நோன்பு மேற்கொண்டு உயிர்துறப்பது வடக்கிருத்தலாகும். அன்றைய காலத்தில் இச்சடங்கானது சமூகத்தின் நலனில் பெரும் பங்கு வகித்தது. வடக்கிருந்து உயிர் துறக்கும் நிலையினை “வானுலகம் விரும்பினோர் இவ்வுலக நுகர்ச்சியைத் துறந்து பட்டினியால் உடலை மெலிவித்து, யோக முயற்சியால் உயிரை நீக்குவதற்குத் தாம் வாழ்ந்த இடத்தைவிட்டு வடதிசையில் சென்று மீளாமல் நியமத்துடன் வடக்கிருந்து உயிர்துறத்தல் மரபு. இதனை ‘உதரகமலம்’ என்றும் ‘மகாபிரத்தனம்’ என்றும் கூறுவர். இதனைத் தமிழில் வடக்கிருத்தல் என்பர்”.

செருக்கும் இயல்புடைய யானைகளைக் கொண்ட கரிகால் வளவன், நிறைந்த வருவாயை உடைய வெண்ணிப் போர்க்களத்தில் உண்டாகிய முதுகுப் புண்ணுக்கு வெட்கி வடக்கிருந்து உயிர் துறத்தலை,

“களிஇயல் யானைக் கரிகால் வளவ

சென்றுஅமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற

கலிகொளர் யாணர் வெண்ணிப் பறந்தலை

மிகப்புகழ் உலகம் எய்திப்

புறப்புண் நாணி வடக்கு இருந்தோனே” (புறம், பா.66: 2-8)

என்னும் பாடல் மூலம் வருக்கிருந்து உயிர்துறந்த முன்னோர்களின் நிலையினை அறிந்து கொள்ளமுடிகிறது.

## பொதுத் தெய்வ வழிபாடு

மக்களைக் காக்கும் பொறுப்பு மன்னர்களைச் சார்ந்தது. காக்கும் தொழில் திருமாலைச் சார்ந்தது. இதனால் மன்னனும் இறைவனும் ஒன்றாகக் கருதப்பட்டனர். திருமால் போன்ற நிறத்தையுடைய மன்னன் என்ற கருத்து பொருத்தமுடையதாக அமைவதை,

“மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்

தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்” (தொல்.பொருள்.நூ.1006,09-10)

என்னும் நூற்பா மூலம் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

## பள்ளிப்படைகள்

பள்ளிப்படைகள் என்பது நடுகல் வழிபாட்டின் வளர்ச்சி காரணமான தோன்றியதாகும். இப்பள்ளிப்படையானது அரசர்களுக்காக எழுப்பப்பட்ட சமாதிக் கோயிலாகும்.

முன்னோர் இறையிரவு வழிபாடு

“துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து

இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று” (குறள்.22)

என்ற குறள் மூலம் முன்னோர்களின் சிறப்பும் பெருமையும் கூறப்படுகிறது. “மகத நாட்டிலே பிணத்தைப் புதைத்த இடத்திலே மண் குவித்து மேடாக்கி வணங்கி வந்தனர்” 9. இதுவே பௌத்தர் தூபிகளுக்கு முன்னோடி. மன்னர்கள் இறந்தபின்பு அவர்களுக்கு எழுப்பிய பள்ளிப்படையும், முன்னோர் வழிபாட்டின் முதல் படியாகச் சமாதி வழிபாடு தோற்றம் பெற்றது.

## முடிவுரை

வீரவழிபாடு, பள்ளிப்படைகள், பொதுத்தெய்வ வழிபாடு என இவ்வணக்க முறைகளைக் காணும்போது இனக்குழு மக்களிடமிருந்து முன்னோர் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும். இறந்த பின்பு தன் உடலைவிட்டு உயிர் பிரிந்து செல்கிறது என்ற நம்பிக்கை தோன்றிய போதே முன்னோர் வழிபாடு தோற்றம் பெற்றுவிட்டது. முன்னோர் வழிபாட்டுச் சடங்கானது மிகவும் பழமையானதாக, நம்பிக்கையாக இருந்திருந்தாலும் மரபு வழியாக முன்னோர்கள் வாழ்ந்து வரக்கூடிய நம்பிக்கையின் அடிப்படையில் இருந்துள்ளது. முன்னோர் வழிபாடானது இறப்பு, சொர்க்க உலகம், மேல் உலகம், மறுபிறப்பு என்ற இறைநெறிக் கோட்பாட்டு அடிப்படையில் அமைந்துள்ளதைக் கண்டறிய முடிகிறது.

## References

Baktavatcala Barati, (2003) Cultural Anthropology, meyyappan pathipagam, Chidambaram, India

Neduncheliyan, R., (2011), Thirukural thelivurai, Navalar Neduncheliyan education trust, Chennai, India.

Thamizhannal, Sangam literature people edition, Koviloor Madalayam, Koviloor, India

Thamizhannal, Tholkappiyam mollamum uraiyum, Meenakshi book store, Madurai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License